# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No.367/2018 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | பி.வா.சா– 01 ( DW– 01 ) |
| பெயர் | :- | இராதாகிருஷ்ணன் |
| தேதி | :- | 20–01–2026 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை :–**

நான் விவசாய தொழில் செய்கிறேன். நான் ஏற்கனவே பல்பொருள் அங்காடி வைத்திருந்தேன். 2010-ஆண்டிற்குமுன் பல்பொருள் அங்காடி வைத்திருந்தேன். 2010 ஆம் ஆண்டுமுதல் 2013-ஆம் ஆண்டுமுதல் நிலம் வாங்கி விற்கும் தொழில் செய்துவந்தேன். நான் 2013-ஆம் ஆண்டே வீடு கட்டி கிரகபிரவேசம் செய்தேன். அந்த வீட்டின் பரப்பளவு 4145 சதுரடி என்றால் சரிதான். அந்த வீடு தரைதளம், முதல்தளம் ஆகிய இரண்டு அடுக்குகளை கொண்டது என்றால் சரிதான். நான் அந்த வீட்டை கடன் வாங்கி கட்டினேன் என்றால் Repco வங்கியில் கடன் வாங்கி கட்டினேன். நான் மேற்சொன்ன வங்கி இல்லாமல் பல தனி நபர்களிடமும் மேற்சொன்ன வீட்டை கட்டுவதற்கு கடன் வாங்கினேன் என்றால் சரியல்ல.

மணி மகன் ரமேஷ் என்பவரிடம் நான் 3,00,000/- ரூபாய் கடன் வாங்கி திருப்பி கொடுக்காததால் அவர் சேலம் முதலாம் சார்பு நீதிமன்றத்தில் முதலேற்பு வழக்கு எண் 41/2016 என்ற வழக்கை தொடுத்து அதில் 05.11.2016-ஆம் தேதியன்று எனக்கு எதிராக தீர்ப்பானது என்று

சொன்னால் நான் மேல்முறையீடு தாக்கல்செய்து அந்த வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது. அதுச் சம்மந்தமாக ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மூர்த்தி என்பவர் என்மீது காசோலை மோசடி வழக்கு தொடுத்து அந்த வழக்கில் எனக்கு விசாரணை நீதிமன்றம் ஓராண்டு காலம் சிறை தண்டனை விதித்தது என்றால் சரிதான். நான் மேல்முறையீடு தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரிதான்.

நான் Repco வங்கியில் வாங்கிய கடனை சரியாக செலுத்தாததால் 2016-ஆம் ஆண்டு என்னுடைய வீடு அந்த வங்கியால் ஏலத்திற்கு கொண்டு -வரப்பட்டது என்றால் இல்லை. நான் பணத்தை கட்டிவிட்டேன். வீட்டை ஏலம் விடுவது சம்மந்தமாக Repco வங்கியில் இருந்து எனக்கு அறிவிப்பு வந்தது என்றால் சரிதான். வீடு கட்டி முடிப்பதற்காக நான் வாதியிடம் 8,00,000/- உரூபாயை கடன் வாங்கினேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய எதிர்வழக்குரையிலும் முதல்விசாரணையில் தாக்கல் செய்துள்ள ஆணையுறுதியிலும் நானும் வாதியும் இடம், நிலம் வாங்கி விற்கும் தொழில் செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நானும் வாதியும் தூரத்து உறவினர்கள் என்றால் இல்லை. நான் STC 244/2018 என்ற வழக்கில் நானும் வாதியும் தூரத்து உறவினர்கள் என்று சொல்லிவிட்டு தற்போது பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியும் நானும் ஒரே ஊர் என்பதாலும் பழக்கமானவர் என்பதாலும் கூட்டாக நிலம் வாங்கி விற்கும் தொழில் செய்தோம். எங்களுக்குள் ஒப்பந்தம் எதுவும் எழுதிக் கொள்ளவில்லை. நாங்கள் இருவரும் முதலீடு செய்து அந்த தொழிலை செய்தோம்.

நாங்கள் இருவரும் எவ்வளவு முதலீடு செய்தோம் என்று எதிர்வழக்குரையிலோ முதல்விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் 2,00,000/- உரூபாயும் வாதி 4,00,000/- உரூபாயும் முதலீடு செய்தோம். நாங்கள் இருவரும் மொத்தம் 04 வியாபாரம் செய்தோம். வாதி பெயரில் வாங்கி விற்றோம். வாதி பெயரில் இடம் வாங்கியதற்கு ஆவணம் எதையும் இந்த வழக்கில் தாக்கல்செய்யவில்லை. அந்த ஆவணங்களில் நான் சான்றொப்பம் இடவில்லை. நாங்கள் வாங்கி விற்றதாக நான் சொல்லும் இடங்கள் எது என்று விவரம் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் முடியாது.

நானும் வாதியும் ஒருபோதும் கூட்டாக இடம் வாங்கி விற்கும் தொழில் செய்யவில்லை என்றும் இந்த வழக்கிற்காக அவ்வாறு பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நில வணிகத்திற்காக நான் வாதியிடம் கொடுத்ததாக சொல்லும் காசோலைகளை திருப்பி கேட்டேனா என்றால் கேட்டேன். இடையில் எங்கள் இருவருக்கும் மனவருத்தம் ஏற்பட்டதால் அவர் அவற்றை திருப்பி கொடுக்கவில்லை. இதுச் சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை.

வாதி எனக்கு அறிவிப்புகள் அனுப்பினார் என்று எதிர்வழக்குரையில் சொல்லிவிட்டு அதற்கு முரணாக முதல்விசாரணையில் அறிவிப்புகள் அனுப்பவில்லை என்று பொய் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

எங்கள் வீட்டில் நான், என் மனைவி, மகன், மகள் ஆகியோர் உள்ளோம். சேலம் 636 308, வீரபாண்டி வழி, அரியானூர் அஞ்சல், பேக்காடு என்பது நான் வசிக்கும் வீட்டின் முகவரிதான். STC 244/2018 வழக்கில் நானும் வாதியும் ஓர் இடம்தான் வாங்கி விற்றோம் என்று

சொல்லிவிட்டு இந்த வழக்கில் 04 இடங்களை வாங்கி விற்றோம் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன வழக்கில் விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பை எதிர்த்தி மேல்முறையீடு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

வாதி தரப்பு 02-ஆம் சான்றாளர் தயாநிதி எனக்கு உறவினர் என்றால் இல்லை. பில்லுகடைமேடு என்ற இடத்தில் உதயம் என்ற பெயரில் உணவகம் உள்ளது என்றால் ஏற்கனவே இருந்தது தற்போது இல்லை. அந்த உணவகம் தயாநிதியின் உணவகம் என்றால் அவரையே எனக்கு தெரியாது.

நான் வீடு கட்டுவதற்காக வாதியிடம் மொத்தம் 10,68,000/- உரூபாய் கடன் வாங்கிகொண்டு அதற்காக பின்னிட்டு 03.01.2016-ஆம் தேதியன்று வாதியின் நலச்சார்பாக கடனுறுதிச் சீட்டும் பஞ்சாயத்து முச்சலிக்கையும் நிறைவேற்றிக்கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. வாதியை ஏமாற்ற நானும் அவரும் கூட்டாக நில வணிகம் செய்தோம் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

வழக்குரையில் கோரியபடி வாதிக்கு பணத்தை கொடுக்க கடமை பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.